# பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு குழு

சுற்றுநிருபம் 2011/17

“சுரக்கும் பவ்வ”

Zonal Education Office – Vavuniya North

## நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள்

- கல்வியமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## சிறுவர் இயல்புகள்

- முதிர்ச்சி அடையாத மனம்
- சமூக அனுபவ பலவீனம்
- விருத்தி, வளர்ச்சியடையும் முளை
- துன்புறுத்தல்கள்
- வீட்டு வன்முறை
- தாய் தந்தை பிரிவு
- அன்பு, பாசம், பாதுகாப்பு கிடைக்காமை
- சூழல் துர்நடத்தை மீது நாட்டம்

# சிறுவர் துஷ்பிரயோகம்

- விருத்திக்கு தடையேற்படுத்தும் உடல், உள, பாலியல் ரீதியான துன்புறுத்தல் அல்லது அழுத்தம் ஏற்படுத்துதல்.
- சட்ட ரீதியான பொறுப்பை தவற விடுவதன் மூலம் மேற்படி நிலை ஏற்படுதல்
- கவனயீனம் காரணமாக மேற்படி நிலை ஏற்படுதல்

# பொறுப்பு

- பாடசாலையினுள் பிரவேசித்ததிலிருந்து வெளியேறும்வரை பாதுகாப்பு – பாடசாலை
- 1990.01.20 – ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சாசன கைச்சாத்து
- 1991.07.12 – இலங்கையில் ஏற்று அங்கீகரிப்பு
- 1998 இன் 50 ம் இலக்க சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம்

# சிறுவர் துஷ்பிரயோகம் விருத்தியடைவதற்கான காரணிகள்

- வயதுசார் பாலியல் கல்வி கிடைக்காமை
- சிறுவர் உரிமைகள் தெரியாமை, விழிப்புணர்வின்மை
- துஷ்பிரயோகம் என்றால் என்ன என தெரியாமை
- எப்படி பாதுகாப்பது என தெரியாமை
- சிறுவர் பாதுகாப்புக்கான நிறுவனங்கள், அலுவலர்கள் பொறுப்பு தவறுதல்
- சிக்கல், பிரச்சினைகள் பற்றி பேச, ஆலோசனை பெற நம்பிக்கையான நபர் இன்மை.
- துஷ்பிரயோகத்திற்கு ஆளானால் என்ன செய்வது என அறியாமை
- ஆளுமை விருத்திப் பலவீனம்
- குடும்ப, சமூக சிக்கல்கள்

# சிறுவர் பாதுகாப்புக்குழுவின் நோக்கங்கள்

- துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாத்தல்
- துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய பிள்ளைகள் இருப்பின், இரகசியமாக இனங்காணுதல், கவனித்தல், பாதுகாத்தல், சட்டத்திற்கான நடவடிக்கைகள் எடுத்தல், சி.பா.அ.சபையை விழிப்பூட்டுதல்
- கல்வியில் பின்தங்கிய மாணவர்களை இனங்காணல், அதற்கான சமூக பொருளாதார காரணிகள், குடும்ப பின்னணிகளை ஆராய்தல், வழிப்படுத்தல், வளப்படுத்தல்
- விசேட உடல், உள தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு உதவி புரிதல்
- மன அழுத்தங்களுக்கான ஆக்கபூர்வ சிகிச்சை
- பிள்ளையின் மகிழ்ச்சி உணர்வையும், துன்ப அனுபவத்தையும் பரிமாற வாய்ப்பு ஏற்படுத்துதல்
- பிள்ளை – பெற்றோர் – ஆசிரியர் இடைத்தொடர்பை பலப்படுத்துதல்
- செவிமடுத்தல்
- தேசிய சி.பா.அ.சபையுடன் இணைப்பாக்கம்
- புகை, மது, போதைப்பொருள் பாவனை, பாலியல் மற்றும் ஏனைய தீய நடத்தைகளின்பால் செல்வதை தடுத்தல்.
- ஒழுக்கத்தின் நன்மைகளை ஏற்கச்செய்தல்
- ஒழுக்க நடத்தை கொண்ட சிறுவர் நேயப்பாடசாலையை கட்டியெழுப்புதல்
- நிறைவான ஆளுமை கொண்ட பிள்ளைகளை சமூகத்திற்கு வழங்குதல்.

# சிறுவர் பாதுகாப்புக்குழுவின் கட்டமைப்பு

| மாணவர் எண்ணிக்கை | மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை | மாணவர் பிரதிநிதித்துவம் | ஆசிரியர் குழாம் பிரதிநிதித்துவம் | பெற்றோர் பிரதிநிதித்துவம் |
|---|---|---|---|---|
| 200 க்கு குறைவான | 10 | 6 | 2 | 2 |
| 200-500 | 20 | 14 | 3 | 3 |
| 500-1000 | 30 | 22 | 4 | 4 |
| 1000 க்கு மேல் | 40 | 30 | 5 | 5 |

- ஆசிரியர்கள் – ஒழுக்கசீலர்கள், மாணவருடன் சுமூக செயலாற்றுகின்றவர்கள் (வழிகாட்டலும் ஆலோசனையும்)
- பெற்றார் – குற்றச்சாட்டுக்கள் அற்ற, ஒழுக்கசீலர்கள் (பா.அ.ச ஊடாக)
- மாணவர் – பிரதான மாணவ தலைவன், தலைவி உட்பட்ட தரம் 6 இலிருந்தான மாணவர்கள்

# சிறுவர் பாதுகாப்புக்குழுவின் செயற்குழு

- தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உப செயலாளர் + 5 செயற்குழு உறுப்பினர்களும் – மாணவர்கள்
- அறிக்கைகள் – செயலாளர்
- மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிக்கை அனுப்புதல்

# சிறுவர் பாதுகாப்புக்குழுவின் செயலாற்றுகை காலம்

- 1 வருடம்.
- 1/3 பங்கினரின் எதிர்ப்பின்றேல் 2 வருடம்

# குழுக்கூட்டம்

- மாதம் ஒரு தடவை – வருடம் 9

## ஆலோசனை

- அதிபர் அல்லது அவரால் பிரேரிக்கப்படும் பிரதி, உதவி அதிபர் அல்லது ஆசிரியர்

## இணைப்பாக்க ஆசிரியர்

- வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்
- கோட்ட, வலய, மாகாண கல்வி அதிகாரிகளுடன்
- மாவட்ட சி.பா.அ.சபை இணைப்பு உத்தியோகத்தருடன்
- மாவட்ட உளசமூக இணைப்பு உத்தியோகத்தருடன்

# குழு மேற்கொள்ளத்தக்க செயற்பாடுகள்

- துஷ்பிரயோகம், பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பான விழிப்பூட்டல்
- உள சமூக செயற்பாடுகள்
- ஆளுமை விருத்தி செயற்றிட்டங்கள்
- தலைமைத்துவ பயிற்சிகள்
- அழகியல் இரசனை மேம்பாட்டு செயற்றிட்டங்கள்
- ஒழுக்க விருத்தி செயற்றிட்டங்கள்
- நேர முகாமைத்துவ செயற்றிட்டங்கள்
- புகை, மது, போதை தடுப்பு நிகழ்வுகள்
- நவீன பாட விருத்தி செயற்றிட்டங்கள்
- பரீட்சை வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- Happy & Sad Box
- பிற பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள்

## நிதியீட்டம்

- அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை ஊடான நிகழ்வுக்கு திரட்டப்படும் நிதி அதிபர் மேற்பார்வையில் பா.அ.க ஊடாக பயன்படுத்தப்படலாம்.

## ஆவணங்கள்

- கூட்ட அறிக்கைகள்
- நிதியியல் ஆவணங்கள்
- செயற்றிட்ட ஆவணப்படுத்தல்கள்